# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 145 / 2023

| Deposition of Witness for | Prosecution PW23<br>Defence<br>Court |
|---|---|

Name : **Thiru. Ulaganathan**

Father / Husband Name : Mohanraj

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 9th day of February, 2026.

**(A1, A3, A5, A6 are present. A2 and A4 are absent, petition filed and allowed)**

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**முதல் விசாரணை :**

**நேரம் 11.55 மணி**

நான் சென்னை, அய்யப்பன்தாங்கலில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் கையொப்பம் எதுவும் போடவில்லை. என்னிடம் காட்டப்படும் 1 முதல் 5 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதலாவதாக சாட்சி கையொப்பங்கள் என்னுடையதல்ல. தற்போது என்னிடம்

காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பங்கள் என்னுடையதல்ல.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 09-08-2022 ஆம் தேதி நானும், எங்கள் ஊரைச்சேர்ந்தவர் சாகுல்அமித் என்பவரும் குமணன்சாவடி பஸ் ஸ்டாண்ட்டில் குன்றத்தூர் செல்வதற்காக நின்று கொண்டிருந்ததாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக SRMC காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரியின் கைது குறித்து எனக்கு தகவல் தெரிவித்து அவர்கள் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதாகவும், நாங்கள் இருவரும் ஒப்புக்கொண்டு எதிரி சூர்யா அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மற்றும் சம்பவத்தன்று உடுத்தியிருந்த ஆடை மகஜரில் கைப்பற்றியதாகவும் மற்றும் 2 ஆம் எதிரி தினேஷ் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அதன்படி மகஜரில் கைப்பற்றிய சம்பவத்தன்று உடுத்தியிருந்த ஆடையையும், எதிரி கருப்பய்யா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் சம்பவத்தன்று உடுத்தியிருந்த ஆடையை மகஜரில் கைப்பற்றியதாகவும், மற்றும் எதிரி கணேஷ் கொடுத்த ஒப்பதல் வாக்குமூலம் அதனடிப்படையில் சம்பவத்தன்று அவர் உடுத்தியிருந்த ஆடையை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியும், எதிரி சுபாஷ் அவர் கொடுத்த ஒப்பதல் வாக்குமூலம் அதனடிப்படையில் சம்பவத்தன்று அவர் உடுத்தியிருந்த ஆடையை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியும் மேற்சொன்னஎதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் மற்றும் மகஜர்களில் கையொப்பமிட்டுவிட்டு சாட்சியாக இருந்து கையொப்பம் இட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.